**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரங்கிப்பேட்டை.**

**2025 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் நாள்**

**CC.90/2017**

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)ன் விதிமுறைகளின் படி பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்கள் திரு.த. யுவராஜ் அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரபு | வயது | : | 42 |
| த.பெ | : | கோபால் | நிலை | : | **PW-2 (LW-3)** |

Accused present with counsel. Learned APP present.

**அரசு தரப்பில் முதல் விசாரணை -** நான் தற்போது கள்ளிக்காட்டுத்தெரு, மேல்புவனகிரியில் வசிக்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ஆச்சியம்மாள் எனது ஊரைச்சேர்ந்தவர். மேற்படி வழக்கு சம்மந்தமாக அவரது மகன் சீனிவாசன் என்பவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு மாலை 5.00 மணியளவில் மேல்புவனகிரி கள்ளிக்காட்டுத்தெருவில் உள்ள எனது டீக்கடையில் டீ குடித்துவிட்டு வீட்டிற்கு சென்றவரை நடேசன் என்ற பேருந்து மோதியதில் சத்தம் கேட்டது. நான் சென்று பார்த்தபோது கூட்டமாக இருந்தது. அங்கிருந்த போலிசார் எங்களை பார்க்கவிடவில்லை. சம்பவ இடத்திற்கு அருகில் செல்லாததால் மேற்படி ஆச்சியம்மாளுக்கு எங்கு அடிப்பட்டது, எப்படி அடிப்பட்டது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கேட்கப்பட்டதன் பெயரில் மேற்படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, சாட்சி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.**

கடந்த 27.03.2017 அன்று மாலை 5.00 மணிக்கு எனது கடையில் டீ குடித்துவிட்டு தெற்கிலிருந்து வடக்கு நோக்கி புவனகிரி ஒரு வழிப்பாதை ரோட்டில் சங்கர்லால் வீட்டிற்கு முன்பு நடந்து ரோட்டை கடந்து வரும்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 61 J7979 என்ற நடேசன் போக்குவரத்து பேருந்தை ஆஜர் எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண் அடிக்காமலும் ஓட்டிவந்து ஆச்சியம்மாள் மீது பேருந்தின் முன் வலது பக்கம் மோதி அவர் நிலைதடுமாறி பேருந்தின் நடுப்பகுதியில் விழுந்து வலது பின் சக்கரம் அவர் தலையில் ஏறி மண்டை உடைந்து, மூளை சிதறி அதே இடத்தில் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தை நான் நேரடியாக பார்த்ததாகவும், ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்தினார் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து குறித்து அ.சா.1க்கு நான் தான் தகவல் சொன்னேன். சம்பவ இடத்தில் அ.சா.1யும், ஆஜர் எதிரியையும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தையும் நேரடியாக பார்த்தார் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

விபத்து ஏற்பட்டது மாலை நேரம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சத்தம் கேட்டு சம்பவம் நடந்து 5 நிமிடம் கழித்து தான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். இறந்தவரின் மகனான அ.சா.1ற்கு நான் தகவல் சொல்லவில்லை. சம்பவ இடத்தில் ரத்தத்தை பார்த்தால் மயக்கம் வரும் என்பதால் அந்த இடத்திற்கே சென்று பார்க்கவில்லை.ஆஜர் எதிரியை நான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றால் சரிதான். இறந்தவரின் மகனான அ.சா.1யும் நான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை. இவ்வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**